

# <u>உயர் தொழில் நுட்ப ஆய்வகங்களின் வழி வளரறி மதிப்பீடுகள்</u>

## General Instructions:

- உயர் தொழிநுட்ப ஆய்வகத்தில் சர்வர் கணினியை எப்பொழுதும் ON செய்து வைத்திருக்கவும்.
- உயர் தொழில்நுட்ப ஆய்வகத்தை சுத்தமாக வைத்திருங்கள்.
- உயர் தொழிநுட்ப ஆய்வகத்தில் ஏற்படும் சந்தேகக்கங்களையும் குறைகளையும் 14417 என்ற எண்ணிற்கு தொடர்பு கொண்டு தெரிவிக்கவும்.
- வகுப்பாசிரியர் மட்டுமே வினாத்தாள் உருவாகுதல் நிகழ்வை மேற்கொள்ள வேண்டும். மதிப்பீட்டு தேர்வு நடைபெறுவதற்கு ஒரு நாள் முன்பாவது வினாத்தாள் உருவாக்கும் நிகழ்வை முடித்திருக்க வேண்டும்.
- வினாத்தாள் உருவாக்குதல் நிகழ்வு நடைபெறுவதை தலைமை ஆசிரியர் உறுதி செய்ய வேண்டும்.
- தலைமை ஆசிரியர் வினாத்தாள் உருவாக்குதல் நிகழ்வு நடைபெற்றதையும் , மாணவர்களுக்கு மதிப்பீடு வினாடி வினா நடைபெற்றதையும் DC மற்றும் CEO அலுவலகத்திற்கு தெரியப்படுத்த வேண்டும்.


1. பள்ளிகளில் அமைந்துள்ள உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள் (HiTech Labs) அனைத்தையும் முதலில் சர்வர் கணினியைக் கொண்டு இணைய வழியில் பதிவு செய்திருக்க வேண்டும். இதற்கு சர்வர் கணினியில் உள்ள இணைய உலாவியைத் (Firefox web browser) திறந்து http://locsrv.in:8080 என்னும் இணைய முகவரியைப் பயன்படுத்த வேண்டும். இது ஒரு முறை மட்டுமே மேற்கொள்ள வேண்டிய செயலாகும். இந்த இணையதளம் உயர்தொழில்நுட்ப ஆய்வகங்களில் மட்டுமே செயல்படக் கூடியது.







2. **சர்வர் கணினியை முறையாகப் பதிவு செய்திருப்பின், அடுத்த முறை http://locsrv.in:8080 என்னும் இணைய முகவரியைத் திறந்தால், நம் பள்ளியின் பெயரும் UDISE எண்ணும் திரையில் தெரியும்.** இதில் ஏதேனும் பிழைகள் இருந்தால் தொலைபேசிகளின் வழியாக 14417 என்னும் எண்ணைத் தொடர்பு கொண்டும் குறையைத் தெரிவிக்கலாம்.

3. **ஒருமுறையேனும் உயர்தொழில்நுட்ப ஆய்வகத்தின் சர்வர் கணினியில் தலைமை ஆசிரியரின் EMIS ID வழியாக உள்நுழைய வேண்டும். அங்கு வலப்பக்கத்தில் உள்ள Manage பட்டனைச் சொடுக்கி Update Credentials பிரிவில் உள்ள Update பட்டனைச் சொடுக்க வேண்டும். இது ஒருமுறை மட்டுமே பயன்படுத்த வேண்டிய நிகழ்வாகும். இதற்குப் பின் சரவர் கணினியில் நம் EMIS ID ஐ விட்டு வெளியேறலாம்.**




**4. ஒருமுறையேனும் உயர்தொழில்நுட்ப ஆய்வகத்தின் சர்வர் கணினியில் ஆசிரியரின் EMIS ID வழியாக உள்நுழைய வேண்டும். அங்கு வலப்பக்கத்தில் உள்ள Manage பட்டனைச் சொடுக்கி Fetch Events பிரிவில் உள்ள Update பட்டனைச் சொடுக்க வேண்டும். இது ஒருமுறை மட்டுமே பயன்படுத்த வேண்டிய நிகழ்வாகும். இதற்குப் பின் சரவர் கணினியில் நம் EMIS ID ஐ விட்டு வெளியேறலாம்.**





5. உயர் தொழில்நுட்ப ஆய்வகங்களில் வினாடி வினா மற்றும் வளரறி மதிப்பீடுகளை நடத்துவதற்கு, முதற்கட்டமாக https://exam.tnschools.gov.in என்னும் இணையதளத்தை பயன்படுத்த வேண்டும். இந்த இணையதளத்தை உயர்த ொழில்நுட்ப ஆய்வகம் மட்டுமன்றி இணை யத் த ொடர்புள்ள எந்தக் கணினி / கை ப்பே சி மூலமாகவும் அணுக முடியும். ( குறிப்பு: இதற்கு முன்பாக EMIS வழியாகப் பயன்படுத்திய exams.tnschools.gov.in என்னும் முகவரியைப் பயன்படுத்தக்கூடாது. )

6. தற்பொழுது https://exam.tnschools.gov.in எனும் இணையதளத்தில் உள்நுழைந்து அன்றைய தினம் தேர்வு நடைபெறும் வகுப்பின் வகுப்பு ஆசிரியர் தனது EMIS ID மற்றும் Password பயன்படுத்தி உள்நுழைய வேண்டும். அதில் Event எனும் தளத்தில் உங்கள் வகுப்பிற்கான தேர்வு உருவாக்கப்பட்டு இருக்கும். அதில் offline எனும் தளத்தினை தேர்வு செய்ய வேண்டும். அதில் QP allocation எனும் தளத்தினை தேர்வு செய்ய வேண்டும்.

**6. தற்பொழுது நாம் வினாத்தாள் உருவாக்கும் தளத்தில் இருக்கிறோம். வகுப்பாசிரியர் மட்டுமே வினாத்தாள் நிகழ்வை உருவாக்க வேண்டும். அனைத்து பாடங்களுக்குமான வினாக்களையும் பிற பாட ஆசிரியர்களுடன் கலந்தாலோசித்து வகுப்பாசிரியர் மட்டுமே தேர்ந்தெடுக்க வேண்டும்.**

**7. இவற்றை ஒரே வினாத்தாள் நிகழ்வில் ஆசிரியர் உருவாக்க வேண்டும். ஒவ்வொரு பாடத்திருக்கும் 6 கேள்விகள் என மொத்தம் 30 கேள்விகளை உருவாக்க வேண்டும்.**


8. அங்கு நாம் உருவாக்கவுள்ள வினாத்தாளின் வகை குறித்து கே ட்கப்பட்டுள்ள களங்களை நிரப்பி SEARCH பட்டனை ச் ச ொடுக்க வே ண்டும்.





9. அதற்குக் கீழ் வெளிவரும் பாடத்தலைப்புகளைத் தேவைக்கேற்பத் தேர்ந்தெடுத்துக் கொண்டு CREATE பட்டனைச் சொடுக்கி ஒரு குழுவை உருவாக்க வேண்டும்.





10. இதே போல மீண்டும் ஒரு முறை அதே பாடத் தலைப்பையோ அல்லது பிற தலைப்புகளையோ தேர்ந்தெடுத்து மீண்டும் ஒரு குழுவை உருவாக்க வேண்டும். இது போல எத்தனை குழுக்களை வேண்டுமானாலும் உருவாக்கிக் கொள்ளலாம். ஆனால் குறைந்தது இரு குழுக்களை யாவது உருவாக்க வே ண்டும்.





11. அங்குள்ள Questions to Insert என்னும் பகுதியின் கீழ் இடம்பெறும் எண்ணைச் சொடுக்கி ஒவ்வொரு குழுவிலிருந்தும் நமக்குத் தேவைப்படும் வினாக்களின் எண்ணிக்கையைக் குறிப்பிட வேண்டும்.





12. இவ்வாறாக குறைந்த அளவு 30 வினாக்கள் அமையுமாறு வினாக்குழுவை உருவாக்குவது நலம்.





13. அடுத்ததாக இதன் கீழ் உள்ள CONFIRM பட்டனைச் சொடுக்க வேண்டும்.





14. இப்போது CONFIRM பட்டன் மறைந்து அந்த இடத்தில் வந்துள்ள CREATE VERSION பட்டனைச் சொடுக்க வேண்டும்.





15. இப்போது மேற்கண்ட படிவங்கள் யாவும் மறைந்து புதிய திரைதோன்றியிருக்கும். தேர்வுக்கான கால நேரம் ஒரு மணி நேரம் ஆகும். இதை 30 நிமிடங்கள் என மாற்றியமைக்க வேண்டும்.








16. இத்திரை யில் வலப்புறம் உள்ள EDIT பட்டனைச் சொடுக்க வேண்டும்.





17. இப்போது கீழே உள்ள No. of Sets மற்றும் No. of versions களத்தை நிரப்ப வேண்டும். எத்தனை வினாத்தாள்களை உருவாக்க வே ண்டும் என்பதை No. of Sets களம் வழியாக முடிவு செ ய்யலாம். நாம் உருவாக்க உள்ள வினாத்தாள்களை எத்தனை வழிமுறை களில் உருவாக்கலாம் என்பதை No. of versions களம் வழியாக முடிவு செ ய்யலாம். பொதுவாக நம் பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை க்கு ஏற்ப இதை முடிவு செய்யலாம். பிறகு Generate Paper பட்டனைச் சொடுக்க வேண்டும்.




18. இப்போது புதிதாகத் தோன்றியுள்ள Start Allocation பட்டனைச் சொடுக்க வேண்டும்.





19. புதிதாகத் திரையில் தோன்றியுள்ள தகவல்களை உறுதி செ ய்து Allocate பட்டனைச் சொடுக்க வேண்டும்.





20. திரையில் தோன்றும் வினாவுக்கு OK பட்டனைச் சொடுக்கி உறுதி செய்ய வேண்டும்.




21. வெற்றிகரமாகத் திட்டத்தைச் செயல்படுத்திய பிறகு இத்திரையை விட்டு வெளியேறலாம்.




22. இப்போது நாம் வெற்றிகரமாக மாணவர்களுக்கான வினாடி வினா வினாத்தாளையும் உருவாக்கி விட்டோம் . நம் வினாத்தாள்களை உயர் தொழில் நுட்ப ஆய்வகத்தின் வழி மாணவர்களுக்கு வழங்குவதற்கு நமக்கு இரண்டு வழிகள் உள்ளன.
    a. உயர் தொழில் நுட்ப ஆய்வகத்தின் சர்வர் கணினியில் உள்ள இணைய உலாவியைத் (Firefox web browser) திறந்து [http://locsrv.in:8080](http://locsrv.in:8080) என்னும் இணைய முகவரியில் ஆசிரியர் தம் EMIS ID கொண்டு உள்நுழைய வேண்டும். பின்னர் வலப்பக்கத்தில் உள்ள Manage பட்டனைச் சொடுக்கி Fetch Events பகுதியில் உள்ள Update பட்டனைச் சொடுக்க வேண்டும்.





23. வினாத்தாள் நிகழ்வுகளை எந்தக் கணினி அல்லது திறன்பேசியில் இருந்தும் உருவாக்கலாம் என்பது குறிப்பிடத்தக்கது. மேற்கண்ட செயல்பாடுகளில் ஏதேனும் குறைகள் ஏற்பட்டால் 14417 என்னும் எண்ணைத் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம்.


24. அடுத்ததாக வினாடி வினா / வளரறி மதிப்பீடு நடை பெறும் நாளன்று ஆசிரியர் உயர் தொழில் நுட்ப ஆய்வகத்தில் உள்ள சர்வர் கணினியில் உள்ள இணைய உலாவியை த் (Firefox web browser) திறந்து [http://locsrv.in:8080](http://locsrv.in:8080) என்னும் இணைய முகவரியை அணுக வே ண்டும்.

25.ஆசிரியர் தன்னுடை ய EMIS IDஐப் பயன்படுத்தி அதன் வழியாக உள்நுழைய வேண்டும்.


26. அவர் உருவாக்கிய வினாத்தாள்கள் அதற்கான நிகழ்வுகளுடன் திரையில் அவருக்குத் தோன்றும்.




27. ஆசிரியர் தான் உருவாக்கிய நிகழ்வுக்கு எதிரே உள்ள Download QP பட்டனைச் சொடுக்கி பதிவிறக்கம் செய்ய வேண்டும். இப்பணியை வினாடி வினா தொடங்கும் நேத்துக்கு முன்பாகவே செய்திருக்க வேண்டும். இதற்குப் பிறகு ஆசிரியர் தன் EMIS ID இல் இருந்து வெளியேறி விடலாம். இச்செயலுக்குப் பிறகு தேவை இருப்பின் இணைய இணை ப்பையும் நிறுத்தி விடலாம்.





28. வினாடி வினா / வளரறி மதிப்பீடு தொடங்கும் நேரத்திற்கு முன்பாகவே மாணவர்களை உயர் தொழில் நுட்ப ஆய்வகங்களில் உள்ள அனைத்து கணினிகளிலும் அமர வைக்க வேண்டும். மாணவர்கள் இணைய உலாவியைத் (Firefox web browser) திறந்து http://locsrv.in:8080 என்னும் இணை ய முகவரியில் தங்கள் EMIS IDஐப் பயன்படுத்தி உள்நுழைய வே ண்டும்.




29. தற்போது திரையில் தெரிகின்ற தன் ஆசிரியரால் உருவாக்கப்பட்ட வினா நிகழ்வுக்கு எதிரே உள்ள START பட்டனை மாணவர் சொடுக்கி தேர்வைத் தொடங்கலாம். இந்த படிநிலை களில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் 14417 என்னும் எண்ணைத் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம்.


30. மாணவர்கள் தங்கள் ஆசியரால் உருவாக்கப்பட்ட வினாத்தாளைக் கொண்டு வளரறி மதிப்பீட்டை மேற்கொள்ளலாம்.




31. கடைசி வினாவுக்கு பதிலளித்து Submit பட்டனைச் சொடுக்குவதன் மூலமாக மாணவரால் விடைத்தாளை ஒப்படை க்க முடியும்.






32. விடை த்தாளை ஒப்படைத்த பிறகு தங்கள் செயல்திறனை மாணவர்கள் திரையில் காண இயலும்.




33. இப்போது மாணவர் தங்கள் EMIS ID இலிருந்து வெளியேறலாம். தன்னுடைய முறைக்காகக் காத்திருக்கும் அடுத்த மாணவர் வினாடி வினா / வளரறி மதிப்பீட்டை மேற்கொள்ளலாம் .

34. வினாடி வினா / வளரறி மதிப்பீட்டை வெற்றிகரமாக அனைத்து மாணவர்களுக்கும் நடத்திய பிறகு, ஓர் ஆசிரியர் சர்வர் கணினியில் இணைய உலாவியைத் (Firefox web browser) திறந்து http://locsrv.in:8080 என்னும் இணை ய முகவரியில் தன்னுடை ய EMIS ID ஐக் கொண்டு உள்நுழைந்து தன்னுடைய மாணவர்கள் அனைவரின் செயல்திறனை யும் குறிப்பெடுத்துக் கொள்ளலாம்.




35. இதற்கு முன்பாக தேர்வுக்காக இணைய இணை ப்பை த் துண்டித்து வைத்திருந்தால் இப்போது மீண்டும் இணைய இணைப்பை ஏற்படுத்திக் கொள்ளலாம் . இதன் பிறகு இறுதியாக, ஆசிரியர் தங்கள் EMIS கணக்கில் வலப்பக்கம் உள்ள Manage பட்டனைச் சொடுக்கி Send Responses பிரிவின் கீழ் உள்ள Send பட்டனை அழுத்துவதன் மூலம் தங்கள் மாணவர்களின் செ

யல்திறனை பிற்காலப் பயனுக்காகச் சே மித்து வைக்க வேண்டும்.

